Thalaivaasal

# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 18 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | ஒக்ரோபர் 15, 2020


## கொவிட் தடுப்பு விதிமுறைகளுடன் நள்ளிரவு வெளியாகிறது வர்த்தமானி

கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காகு தேவையான புதிய ஒழுங்குமுறைகள் அடங்கிய வர்த்தமானி

03



## “காவல்துறையா? கள்ளமரம் வெட்டும் துறையா?”

# ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைதீவில் தமிழ் மக்களது காணிகளை ஆக்கிரமிப்பதில் மும்முரம் காட்டிவரும் இலங்கை வனவள திணைக்களத்தை முடக்கி ஊடகவியலாளர்கள் முன்னெடுத்த போராட்டத்தால் அதிகாரிகள் அறைகளினுள் பதுங்கி கொண்டனர்.குரல் எழுப்பி அவர்களை அழைத்து கடிதங்களை கையளித்த ஊடகவியலாளர்கள் அவர்கள் அலுவலகம் முன்பாகவே மரக்கன்று நாட்டினர்.

03

## பல்கலை விரிவுரையாளர் பணியிலிருந்து விடைபெற்றார் குருபரன்




யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளரான சட்டத்தரணி இன்றுடன் கற்பித்தல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளார்.

“இன்று இறுதி நாள். இந்த தசாப்த காலப் பயணத்தில் அன்பும் ஆதரவும் தந்த நல்லுள்ளங்களுக்கு நன்றி. பயணம் வேறு பாதைகள் வழி தொடரும்“ என அவர் தனது வெளியேற்றம் தொடர்பில் பதிவிட்டுள்ளார்.

03

## 20க்கு எதிராக மக்கள் எதிர்ப்பினை காட்டுவர்!

### சுமந்திரன் திடம்



புதிய அரசியல் திருத்தத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பினை வலுக்கச்செய்வதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறிலின் அலுவலகத்திற்கு விஜயம் செய்திருந்த

03

## வயிறு வலிக்கு வைத்தியசாலை சென்றவருக்கு கொரோனா

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நபர் ஒருவர் இரகசியமாக வேறொரு நோய் அறிகுறியை குறிப்பிட்டு ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதியாகியுள்ள நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் திஸ்ஸமஹாராம பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் கடந்த 12 ஆம் திகதி முதல் தனிமைப் படுத்தப்பட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பி சிஆர் பரிசோதனைக்கான ஏற்பாடுகள்

03

## மகனைத் தேடியலைந்த தாய் மரணம்


காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடியலைந்த தாயார் ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மகாலிங்கம் பத்மாவதி (வயது 70) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவரது மகன் மாகாலிங்கம் உசாகரன் கடந்த 2009 ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். மேலும் இவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்து மீண்டு வந்தவர். பின்னர் இவர் தாயகத்தில் இடம்பெற்ற அனைத்து

03

## விடுதலைப் புலிகளே எம்மை அழைத்தனர் - எரிக் சொல்ஹெய்ம்



விடுதலைப் புலிகள் விரும்பித் தம்மை அழைத்ததன் காரணத்தாலேயே தமது நாடு இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுக்களில் நடுநிலைமை வகித்தது என நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணல் ஒன்றிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கைக்கான சமாதான அனுசரணைப் பணியில் பிரான்ஸ்

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்







மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் ஊடகவியலாளர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காவல்துறையே மரக்கடத்தலுக்கு துணை போகாதே!, ஊடக சுதந்திரம் பெயரளவிலா ஊடக அமைச்சரே!, காவல்துறையே கள்ளமரம் வெட்டும் துறையா?, இலங்கை அரசே ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்து! என சுலோகங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# யாழில் ஐந்நூறு குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்!



யாழ்ப்பாணத்தில் இதுவரை 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய கொரோனா நிலைவரம் தொடர்பாக நேற்று (புதன்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் கூறுகையில், “யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைவரம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும்கூட அபாயமான சூழல் விலகவில்லை. எனவே. அனைவரும் கவனமாகச் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் இதுவரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், கட்டாய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 28இல் இருந்து தற்போது 18ஆகக் குறைவடைந்துள்ளது. பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தொற்று இனங்காணப்படாதவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒருவருக்கு மாத்திரமே யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. எனினும், யாழ். மாவட்டத்தினுடைய பாதுகாப்பை உறுதிபடுத்துவதை முன்னிட்டு எடுக்கப்படுகின்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் நீண்டதூர போக்குவரத்தில் ஈடுபடுவோர் தங்களைப் பற்றிய விபரங்களை சுகாதாரப் பிரிவினருக்கு கட்டாயமாக தெரியப்படுத்த வேண்டும்.

தேவைப்படின், அவர்களுக்குரிய PCR பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதாரப்பிரிவினர் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே, அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# இணையத்தில் பொதுமக்கள் தின சந்திப்பு

கொவிட் - 19 வைரஸ் நிலைமையின் காரணமாக பொது மக்களுக்கு நீதி அமைச்சுக்கு விஜயம் செய்வதில் உள்ள சிரமம் தொடர்பாக கவனத்தில் கொண்டு நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலிசப்ரியின் தலைமையில் கடந்த திங்கட் கிழமைகளில் நடைபெற்றவுள்ள பொதுமக்கள் தினம் Online இல் நடத்துவதற்கு ஒழுங்குள் செய்யப்பட்டுள்ளன.

https://bit.ly/3lIBFgq என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து பிரச்சினைகளை முன்வைக்க முடியும், அத்தோடு நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moj.gov.lk இல் பிரவேசித்து சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நீதி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை அன்று நடைபெறும் பொதுமக்கள் தினத்துக்கமைவாக அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரிச்சினைகளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு முன்வைக்க முடியும் என்றும் அமைச்சின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரித்தானியா கழிவுகளை மீள அனுப்ப உத்தரவு!



பிரித்தானியாவில் இருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய 242 கொள்கலன்களை மீள அனுப்புமாறு, மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொள்கலன்களை மீண்டும் ஏற்றுமதி செய்யக் கோரி மாற்றுக் கொள்கைக்கான மையம் தாக்கல் செய்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவுகளை மேல்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் நீதிபதி சோபிதா ராஜகருணா ஆகியோர் பிறப்பித்தனர்.

கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் பிரித்தானியாவில் இருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டன.

130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியிலும் வைக்கப்பட்டன. அவற்றில் 21 கொள்கலன்கள் இதுவரை பிரித்தானியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டன.

இதனையடுத்து, பிரித்தானியாவில் இருந்து 263 கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்கு இலங்கை அரசாங்கம் 1.69 பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியது.

டயஸ்பட சாசனத்தின் கீழ் இலங்கை வழக்கு தாக்கல் செய்துள்ளது என சுற்றுச்சூழல் அமைச்சு அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இந்த விடயம் தொடர்பாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது


# ஹட்டன் நஷனல் வங்கி ஊழியருக்கு கொரோனா

ஹட்டன் நஷனல் வங்கியின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக குறித்த வங்கி அறிவித்துள்ளது.

மருதானையில் அமைந்துள்ள இந்த கட்டிடத்தின் 19 ஆவது மாடியில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கே தொற்று உறுதியாகியுள்ளது.

அந்த மாடியில் பணியாற்றிய அனைவரும் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

# கொழும்பில் கொரோனா பீதி: மாநகர சபைக்கு பூட்டு!



கொழும்பில் புதிதாக ஏழு கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், கொழும்பு மாநகரச சபை இன்று முதல் மூடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு மாநகரசபையை இரண்டு நாட்களுக்களுக்கு அடைத்து விடவும், பொது மக்கள் நிவாரண திணைக்கள காரியாலயத்தை இரண்டு வாரங்களுக்கு பூட்டிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கொழும்பு மாநகரசபை நகர ஆணையாளர் அலுவலகம் இன்று அறிவித்துள்ளது.

மருதானை டௌன்ஸ் வீதியில் அமைந்திருக்கும் பொது மக்கள் நிவாரண திணைக்களத்தில் பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையிலேயே கொழும்பு மாநகரசபையை இன்று முதல் இரண்டு நாட்களுக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கொரோனா தொற்றுக்கு ஆளாகிய பெண் ஊழியர் பணிபுரிந்த காரியாலயத்தின் 80 ஊழியர்களிடம் நேற்று பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொற்றுக்குள்ளான பெண் நெருங்கிப்பழகியவர்கள் என இனங்காணப்பட்ட, நகரசபையைச் சேர்ந்த 110 பேரிடம் இன்று பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பெண் ஊழியரின் கணவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஊழியர் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சைகள் திணைக்கள அதிகாரியின் கணவனுக்கு கொரோனா?

பரீட்சைகள் திணைக்களத்தின் விசாரணைகள் பிரிவில் கடமையாற்றும் பெண் அதிகாரியின் கணவனுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியான தகவல் பொய்யானது என, அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பூஜித, வைத்தியர்களின் அறிவுரைக்கு அமைய குறித்த அதிகாரியின் கணவன் இரண்டு சந்தர்ப்பங்களில் பீ.சீ.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

பரிசோதனையின் பெறுபேறுகளுக்கு அமைய குறித்த அதிகாரியின் கணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காவல்துறையா?...

கடந்த திங்களன்று முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்ட விரோத மரவெட்டுவது தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து இன்று முல்லைத்தீவில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று யாழ்.ஊடக அமைய ஒழுங்கமைப்பில் வடமாகாண ஊடகவியலாளர் சங்கங்களால் நடத்தப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும், சட்ட விரோத மரம் வெட்டுவதை தடுக்குமாறும், ஊடகவியலாளர்களை தாக்கியவர்கள் பக்கசார்பு இன்றி அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரதி கையளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு சென்று அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டு மரம் ஒன்றையும் கையளித்தனர். பின் முள்ளியவளையில் உள்ள வனவள திணைக்களத்திற்கு சென்று அங்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

அங்கு ஊடகவியலாளர்கள் மரமொன்றை கையளித்ததுடன் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்த முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் தேக்கு மரங்களை பாதுகாக்க கோரி தேக்கு மரமொன்று கையளிக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் அதிகாரி மற்றும் வனவள திணைக்கள அதிகாரிகளது ஆதரவுடனேயே காடழிப்பு நடைபெற்றுவருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுவருகின்றது.

## பல்கலை விரிவுரையாளர்...

குமாரவடிவேல் குருபரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தை பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, கலைப் பீடாதிபதி மற்றும் சட்டத்துறைத் தலைவர் ஊடாக முன்னதாக அனுப்பி வைத்திருந்தார்.

தான் பதவி விலகுவதற்கான காரணமாக , அவர் பல்கலைக்கழக பேரவை தன்னை சட்டத் தொழிலில் ஈடுபடுவதில் இருந்து தடை செய்துள்ளமையை சுட்டிக்காட்டியிருந்தார்.

தன்னால் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு பல்வேறு காரணங்களுக்காக விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்க தான் இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும் தொடர்ந்து தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாதிருக்க தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் தனது இராஜினாமா கடிதத்தில் கலாநிதி குருபரன் குறிப்பிட்டிருந்தார்.

நடைமுறை அனுபவம் இல்லாத ஓர் சட்ட ஆசிரியராக தான் கடமையாற்றுவது இயலாத விடயமென்றும், தனது சட்டத் தொழில் மூலம்தான் செய்து வந்த சமூக பங்களிப்பும் ஊடாட்டமும் தனது ஆசிரியப் பணியில் இணைபிரியா அங்கம் என்றும் அது இல்லாத சட்ட ஆசிரியர் பணியில் தனக்கு ஈடுபடுவது திருப்தியை தர மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சட்டத் தொழிலில் ஈடுபடுவது கூடிய வருமானத்தை தரும் என்ற காரணத்திற்காக தான் இந்த முடிவை எடுக்கவில்லை என்றும் அவ்வாறாக எடுப்பதாயின் தான் அதனை 2010 ஆம் ஆண்டிலேயே அந்த முடிவை எடுத்திருந்துப்பேன் என்றும், வகுப்பறையில் மட்டும் முடங்கியிருக்கும் ஆசிரியராக கடமையாற்ற தான் தயாரில்லை என்றும் குருபரன் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

தன் மீது விதிக்கப்பட்ட தடை பல்கலைக்கழகம் சுயாதீனத்தை முழுவதுமாக இழந்துவிட்டதுக்கான முக்கியமான சான்று என்றும் தனது நலன்கள் தொடர்பில் சுயமாக முடிவு எடுக்க முடியாத பல்கலைக்கழகம் யாருக்காக செயற்படுகின்றது என்ற கேள்வியையும் அவர் இதன்போது எழுப்பியிருந்தார்.

நல்லாட்சி, சட்டத்தின் பாலான ஆளுகை, சுயாதீனம் ஆகியவற்றை தொலைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நல்லாசிரியர்களை ஈர்க்கவும் முடியாமல் தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாமல் நலிவடைந்து கொண்டிருப்பதாக கலாநிதி குருபரன் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20க்கு எதிராக...

நிலையில் இன்று (15) செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில், புதிய அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு எதிராக பல்வேறு பிரச்சாரங்களை செய்து வருகின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்திலும் செயலமர்வு எம்மால் நடாத்தப்பட்டது. அம்பாறை காரைதீவு பகுதியிலும் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து இத்திருத்தம் குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

இப்புதிய திருத்தத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பினை வலுக்கச்செய்வதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். ஏனெனில் இத்திருத்த மானது ஜனநாயக விரோத செயலாக உள்ளது. இதனை நிறைவேற்ற நாங்கள் அனுமதித்தால் இந்நாட்டில் ஜனநாயக கட்டமைப்பினை பேணாது மக்களுக்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாமல் போகும்.

அது போன்று நிலம் சம்பந்தமான பல திட்டங்களையும் அரசாங்கம் தற்போது அமுல்படுத்தி வருகின்றது. எனவே, தான் இத்திருத்தத்தை நிறைவேற்றாமல் ஜனநாயக பண்பினை பேண வேண்டியது எமது கடமையாக உள்ளது. எனவே, பொறுத்திருந்து பாருங்கள் என கூறினார்.

இவ்விஜயத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## விடுதலைப்புலிகளே...

பங்கேற்கவேண்டுமென அப்போதைய அரச தலைவர் சந்திரிகா விரும்பினார். இருந்த போதிலும் இந்த அனுசரணைப் பணியில் நோர்வே பங்கெடுக்கவேண்டுமென விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்பியதன் அடிப்படையிலேயே நோர்வே இந்தப் பணியில் இறங்கியது.

இதற்காக 1998 ஆம் ஆண்டு, நோர்வேயில் உள்ள எனது அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்த தமிழீழ விடுலைப்புலிகள் அமைப்பினர் என்னிடம் இந்த வேண்டுகோளை முன்வைத்தனர்" என்றார்.

அதேவேளை, நோர்வேயின் தலையீட்டுடன் நாட்டில் அப்போதிருந்த ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் பல கட்டங்களாக இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வயிறுவலிக்கு...

செய்யப்பட்டிருந்த நிலையில் வயிறு வலி என தெரிவித்து கடந்த 13 ஆம் திகதி இரவு ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு அனுமதியாகியுள்ளார்.

இதன்போது 18 ஆம் வார்டில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் அவர் தொடர்பில் ஆராய்ந்ததில் பொய்யான தகவல்களை வழங்கி ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதியாகி உள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதேபோல் குறித்த நபர் யால தேசிய பூங்காவில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் சுற்றுலா வழிகாட்டியாக செயல்பட்டு வந்துள்ள நிலையில் கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில் இருந்து வந்த சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் தொற்றாளருடன் சுற்றுலா ஹோட்டலில் தங்கியிருந்த 61 ஊழியர்கள் மற்றும் 61 வெளி ஊழியர்கள் தற்போது தனிமைப் படுத்தப் பட்டுள்ளனர்.

## மகனைத் தேடியலைந்த...

போராட்டங்களிலும் தனது மகனை தேடி நீதி கேட்டு கலந்து கொண்டார்.

இந்த நிலையிலே இவர் நேற்று நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

காணாமல் போன உறவுகளை தேடிய நிலையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை தற்போது 77 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் தடுப்பு...

அறிவித்தலில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கைச்சாத்திட்டுள்ளார்.

இதேவேளை, புதிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல், இன்றிரவு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினால் 10ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்படும் அத்துடன், 6 மாதம் சிறைதண்டனையும் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுப் போக்குவரத்தில் பயணிப்பவர்களுக்கு அவசர அறிவிப்பு!




பொது போக்குவரத்தை பயன்படுத்தும்போது மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் இலக்கங்களை குறித்துக்கொள்ளுமாறு பயணிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்மூலம் குறித்த வாகன சாரதிகளுக்கும் தொற்று குறித்து எச்சரிக்கை விடுக்க முடியும் என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து ஆடைத் தொழிற்சாலை உள்ளடங்களான அனைத்து நிறுவனங்களிலும் பி.சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

குறைந்தது வாரத்திற்கு ஒரு தடவையேனும் தொழிற்சாலை ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருமளவான ஊழியர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல்வேறு தொழிற்சாலை ஊழியர்கள் ஓரிடத்தில் தங்கியிருப்பார்களாயின் அது குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கு தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் சைக்கிள்கள் மோதி பொலிஸ் பொறுப்பதிகாரி காயம்

பாணந்துறை வடக்கு, ஹேன முல்ல சந்தியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டுடன் மோதி பானந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காயமடைந்துள்ளார்.

இன்று (15) அதிகாலை 1 மணியளவில் சட்ட விரோதமாக மோட்டார் சைக்கிள் பந்தயம் இடம்பெற்று வருவதாக கிடைத்த தகவலிற்கு அமைய பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்பகுதிக்கு சென்றுள்ளார்.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிள் பொலிஸ் வாகனத்தின் மீதும் ஒரு மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கால் உடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முச்சக்கரவண்டி கவிழ்ந்ததில் குழந்தை பலி



ஹப்புத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லவாய - பேரகல வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து 500 மீற்றர் பள்ளத்தாக்கில் கவிழ்ந்துள்ளது.

குறித்த விபத்தில் மூவர் பலத்த காயமடைந்து ஹல்தும்மல வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. ஒன்றரை வயது குழந்தை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

ஏனைய அனைவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக தியதலாவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்!

கஹபொல - சிலுமின பிரிவெனாவில் உள்ள 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பிரிவெனாவில் உள்ள பிக்கு ஒருவரை பார்வையிட வந்துச் சென்ற பிக்குவின் தாய், கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதன்காரணமாகவே குறித்த பிரிவெனாவின் பிக்குகள் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பிலியந்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் கொரோனாவைத் தடுக்க 6 குழுக்கள் நியமனம்!

கொழும்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க 6 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் 6 சுகாதார அதிகாரிகளின் கீழ் 49 பொது சுகாதார சேவை பணியாளர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளைக் கண்டறிந்து தொற்று மேலும் பரவாமல் தடுப்பது, கொழும்பு மற்றும் கொழும்பு நகருக்கு வெளியே தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படுவதை தடுப்பது போன்ற முக்கிய விடயங்கள் குறித்து இவர்கள் கவனம் செலுத்தவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிக ஆபத்து மிக்கவர்களை தெரிவு செய்து அவர்கள் தொடர்பான பி.சி.ஆர் பரிசோதனைகள் முதலில் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதல் கொழும்பில் மட்டும் 8833 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## உயர்ந்த பையன் குண்டு வெடித்துச் சிதறியது

இரண்டாம் உலகப் போரில், ஜேர்மனி போர்க்கப்பலை அழிக்கப் பயன்படுத்தப்பட்ட, உலகிலேயே மிகப்பெரிய வெடிகுண்டு ஒன்று போலந்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஐயாயிரத்து 400 கிலோகிராம் எடைகொண்ட 'உயர்ந்த பையன்' எனப் பெயரிடப்பட்ட இந்த வெடிகுண்டை செயலிழக்கச் செய்தபோது வெடித்துச் சிதறியுள்ளது.

இந்த வெடிகுண்டு, ஜேர்மனி-போலந்து எல்லையிலுள்ள ஸ்வினூஜ்ஸி நகரில் கப்பல் போக்குவரத்துக்குப் பயன்படும் பியஸ்ட் கால்வாயில் கடந்த ஆண்டு கண்டெடுக்கப்பட்டது.

ஸ்வினூஜ்ஸி நகரில் இயற்கை எரிவாயு முனையம் அமைந்துள்ள நிலையில், வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும்போது வெடித்துச் சிதறினால் மிகப்பெரியளவில் அசம்பாவிதம் ஏற்படும் என்பதால் கடற்படை அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டனர்.

இந்நிலையில், மிகநீண்ட ஆலோசனை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்குப் பின்னர், பியஸ்ட் கால்வாயில் வெடிகுண்டை நீருக்கடியில் செயலிழக்கச் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதனால், 2.5 கிலோமீற்றர் சுற்றளவுக்குப் பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவித்து, அங்கு வசித்த 750 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர்.

இதையடுத்த, வெடிகுண்டை பியஸ்ட் கால்வாய் நீரில் மூழ்கடித்து செயலிழக்கச் செய்யக் கடற்படை வீரர்கள் முயன்றபோது யாரும் எதிர்பாராத வகையில் வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. எனினும், இந்த வெடி விபத்தில் கடற்படை வீரர்கள் எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் தப்பியுள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின் போது, 1945ஆம் ஆண்டு பிரித்தானியாவின் ரோயல் விமானப் படையினர், ஜேர்மனி போர்க்கப்பலான லுட்ஸோவை அழிக்கும் நோக்கத்தில், ஆறு மீற்றர் நீளம் கொண்ட ஐயாயிரத்து 400 கிலோகிராம் எடைகொண்ட மிகப்பெரிய வெடிகுண்டை வீசினர்.

இந்த வெடிகுண்டில் இரண்டாயிரத்து 400 கிலோகிராம் அளவுக்கு வெடிபொருள் நிரப்பப்பட்டிருந்ததுடன் இது மிகச்சிறிய அளவில் நிலநடுக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குச் சக்தி வாய்ந்ததாகும்.